JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 4 /2021 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | மோனிகா |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 01.08.2024

எதிரிகள் 3,4,5 கு.விமு.ச பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் 1,2 ஆஜர்.

முதல் விசாரணை

நான் பாவூர்சத்திரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் எனது அப்பா வீட்டில் இருக்கிறேன். நான் அரசு போட்டித்தேர்வுக்கு படித்து வருகிறேன். ஆஜர் எதிரி வினோத்குமார் எனது கணவர். ஆஜர் எதிரி தேன்ராஜா எனது மாமானா'ர. எதிரி விஜயா எனது மாமியார், எதிரி ஐஸ்வர்யா எனது கணவரின் தங்கை எதிரி அழகுராஜன் ஐஸ்வர்யாவின் கணவர். எனக்கும் எதிரி வினோத்குமாருக்கும் Matrimonial மூலமாக சம்மந்தம் பேச வந்தபோது நான் TCS– ல் System Analyst ஆக வேலைபார்த்தேன். எனது வருட சம்பளம் ரூபாய் நான்கு லட்சம்மாக இருந்ததது. எனது கணவர் வீட்டில் இருந்து பூ வைக்க வந்தபோது நான் UPSC–ல் படிக்க விருப்பம் கொண்டிருப்பதால் அதற்கு சம்மதித்தால் தான் திருமணம் செய்ய இருக்கிறேன் என்று நான் சொன்ன போது எனது கணவர் அதற்கு

சம்மதித்தார். 2017 ம் ஆண்டு பிப்பரவரி மாதம் நிச்சயதார்த்தம் நடந்தது அதற்கு பிறகு எனது மாமியார் நான் வேலையை விட்டுவிட வேண்டும்மென்று அழுத்தம் கொடுத்தார். வேறு வழிஇல்லாமல் வேலையை விட்டுவிட்டேன். பெற்றோர்கள், உறவினர்கள் சம்மதத்துடன் என்னுடைய முழு சம்மதத்துடன் 01.06.2017 ம் தேதி செங்கோட்டையில் உள்ள முருகன் மகால் திருமண மண்டபத்தில் வைத்து எனக்கும் வினோத்குமாருக்கும் திருமணம் நடந்தது. திருமணத்தின் போது எனது வீட்டிலிருந்து 881.05 கிராம் தங்க நகைகள் கொடுத்தார்கள். ரூபாய் 54 ஆயிரம் மதிப்பில் வெள்ளி பொருட்கள் எனது வீட்டிலிருந்து கொடுத்தார்கள். ரூபாய் 5,25,000 மதிப்பில் வீட்டு உபயோக பொருட்கள் எனது வீட்டில் கொடுத்தார்கள். திருமண செலவு முழுவதும் நாங்கள்தான் செய்தோம். அதற்கு ரூபாய் 20 லட்சம் செலவு ஆனது. வினோத்குமார் வீட்டில் ரொக்கம் வாங்கமாட்டோம் என்று சொல்லி திருமண செலவு அனைத்தையும் எங்களிடம் செய்யச்சொன்னார்கள். திருமணத்தின் போது எனது கணவர் MS படித்து முடித்து பெங்களூரில் அப்பல்லோ மருத்துவமனையில் மருத்துவராக வேலைசெய்தார். திருமணம் முடிந்து இரண்டு நாட்கள் கழித்து எனது கணவர் என்னை பெங்களூருக்கு அழைத்து சென்றார். எனது பெற்றோர் பெங்களூரில் என்னை விட்டுவிட்டு வந்தார்கள். 21.06.2017 ம் தேதி திருமணத்தை பதிவு செய்யவேண்டும் என்பதற்கு தென்காசி சார்பதிவு அலுவலகத்தில் திருமணத்தை பதிவு செய்தபோது எனது அப்பா வீட்டிற்கு நானும் எனது கணவரும் வந்தோம். திருமணம் முடிந்து 10, 15 நாட்கள் எனது மாமியார் நன்றாக பேசினார். ஒருமாதம் கழித்து எனது மாமியார் எனது கணவர் இல்லாத நேரத்தில் என்னை அபாண்டமாக பேசினார். எனது மாமானார் என்னை சேரி குடும்பம் என்று பிச்சைக்காரி என்றும் தெரியாமல் திருமணம் செய்துவிட்டோம் என்றும் பேசினார். எனது மாமியார், மற்றும் மாமனாரிடம் எனது மாமியாரின் தம்பி ராமமூர்த்தி என்பவர் டாக்டர் படித்த எனது கணவரை டாக்டருக்கு திருமணம் செய்யாமல் பொறியியல் படித்த எனக்கு திருமணம் செய்து வைத்து விட்டதாக சொல்லியுள்ளார். அதிலிருந்து Status பிரச்சனை ஆகிவிட்டது. எனது மாமியார் தவறாக என்னை தேர்ந்தெடுத்துவிட்டதாக தினமும் பேசினார். எனது மாமனார் என்னிடம் அப்போதும் எனது கணவருக்கு Matrimonial லிருந்து அழைப்பு வருவதாக மிரட்டினார். எனது கணவருக்கு வேறு திருமணம் செய்து வைப்பதாக மிரட்டினார்.

(நேரமின்மை காரணமாக முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi

Judicial Magistrate,

Tenkasi